# வான் முழக்கம்

மின்னல் 2 முழக்கம் 6



## சமாதானத்திற்கு விடை...

காலாண்டு பல்சுவை இதழ் விலை : ரூ 25.00


உங்கள் இல்லங்களில் நடைபெறும் பூப்புனித நீராட்டு விழாக்களா
பிறந்ததின விழாக்களா, இருமணமும் சேர்ந்து ஓர்மனமாய் இணையும்
திருமணவிழாாக்களா, எவ்விழாவானாலும் Video படம்பிடித்திடவும்
புகைப்படம் எடுத்திடவும்
ரஞ்சன் போட்டோ & வீடியோ
Ranjan Photo & Video
பருத்தித்துறை வீதி,
மந்திகை.


யாழ்நகரில் நவீன வடிவமைப்புகளில்
அழகிய தங்க நகைகளை
22கரட்டில் குறித்த தவணையில்
நம்பிக்கையுடன் செய்து பெற்றிட
அழகைநாடும் மங்கையர் நாடுவது...
நியூ சோபிதா நகைமாடம்
74/1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P-021 2225265


இறைமையும், சுதந்திரமான கூட்டுறவுமே
நாட்டிற்கு உயர்வு!
மண்ணின் குரலாக முழங்கும் வாண்முழக்கம்
தொடர்ந்தும் முழங்க வாழ்த்துகின்றோம்
கட்டைவேலி நெல்லியடி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்
நெல்லியடி,
கரவெட்டி.

## உள்ளே..........


1.முழக்கம் சமாதானத்திற்கு..... 02

2.மின்னல்............. 04

3.ஒலாண்ட்....... 06

4.நாற்சந்தியில்....... 08

5.தமிழவன் கேள்வி...10

6.உலகமயமாக்கல்.. 11

7.கவிதைப்பகுதி... 13

8.பாரம்பரிய கல்வி.....17

9.இன்டர்நெட்.. .. 21

10.சிறுகதை...... 23

11.தமிழ் நாடாளு.... 27



**வான்முழக்கம்**

284, பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

**தொலைபேசி : 0777 111047**


## ஆசிரியர் உள்ளத்தில் இருந்து.........

இரண்டாவது வயதில் கால் பதித்து நடைபயிலும் வான்முழக்கம் உங்கள் உள்ளங்களில் நீங்காத இடம்பிடித்து எமது தமிழ்தேசியத்தை மையப்படுத்தி தொடர்ந்து நடைபயில்வான். எமது இனத்தின் கலை கலாச்சார சமூக பொருளாதார கல்வி மேம்பாட்டிற்கு என்றும் தனது ஆதரவை நல்குவான்.

மகாவித்துவான் வீரமணிஐயர், கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை ஆகியோர் எமது இனத்தின் காவலர்களாக கலைஉலகில் திகழ்ந்துகடந்த வருடம்இந்த உலகையே விட்டுச் சென்றமை எமது இனத்திற்கு கடந்த வருடம் ஏற்பட்ட பேரிழப்பாகும். வான் முழக்கமும் இவர்களிற்காக ஒரு கணம் சிரம் தாழ்த்தி.மறுகணம் எமது தேசம் தேசியம் என்பவற்றிற்காகவும், யுத்த நடவடிக்கையால் சிதைந்த எமது மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி நிறைவான தேசமாக தமிழரின் தாயக பூமி திகழ தன்னாலான பணியை செய்வான் என அன்பு வாசக உள்ளங்களுடன் உறுதிஎடுத்து தன்பணி தொடர்வான்.

அன்புடன்

ஆசிரியர்,

*வே.தவச்செல்வம்*

## முழக்கம்

# சமாதானத்திற்கு விடை....

தென்னிலங்கையில் பல பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு பல அப்பாவி சிங்கள மக்கள் படுகொலை செய்யப்பட காரணமாய் இருந்த **J.V.P** கட்சிக்கும் சமாதானத்திற்கான யுத்தம் என்று கூறிக்கொண்டு தமிழ் மக்கள்மீது யுத்தத்தை கட்டவிழ்த்து விட்டு பல அப்பாவி தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட காரணமாகவிருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் இடைக்கால திட்டவரைபை கையளித்த கையுடன் இரண்டு பயங்கரவாத கட்சிகளுக்கும் இடையில் கூட்டு ஏற்பட்டுள்ளது. இதைவிட தற்போது பாராளுமன்றமும் கலைக்கப் பட்டுள்ளது. சிங்கள தேசத்தில் உள்ள எந்தக் கட்சியும் எமது இனத்தின் உரிமைகளை மனம் உவந்து தரப்போவதில்லை. இவர்கள் காலத்திற்கு காலம் இவ்வாறு ஏமாற்று வேலைகளை செய்வதும் காலம் கடத்துவதுமாக தமது அரசியல் வாழ்க்கைக் காலத்தை நகர்த்துவதே இவர்களின் செயற்பாடாக இருந்து வந்தது. ஆனால் இன்று நிலமை மாறியுள்ளது. விடுதலைப் புலிகள் ராணுவரீதியிலும் சரி அரசியல்ரீதியிலும் சரி ஒரு பலமான சக்தியாக திகழ்கிறார்கள் இதை சர்வதேசமும் ஏற்றுக்கொண்டுள்ளது. இந்த நிலையில் தென்னிலங்கை சக்திகள் இனியும் தமிழ் மக்களை ஏமாற்றலாம் என எண்ணுவது அவர்களின் அறியாமையின் வெளிப்பாடேயாகும்.

தற்போதைய சமாதான காலம் தொடர்வதையே விடுதலைப் புலிகளும் தமிழர்களும், சிங்களமக்களும் விரும்புகிறார்கள். ஆனால் இக்காலப்பகுதியில் எமது மக்கள் இயல்பு வாழ்விற்கு திரும்புவது மிகமுக்கியமானது. இதைவிட சுதந்திரமாக மீனவர்களும், விவசாயிகளும் தொழிலில் ஈடுபடுவதும் மிக முக்கியமான விடயங்களாகும். ஆனால் இவை எதுவும் நடக்காமல் தென்னிலங்கையில் அரசியல் நெருக்கடி தொடர்வதும் எமது மக்கள் தொடர்ந்தும் ராணுவ நெருக்குதல்களிற்கு முகம் கொடுத்து வருவதும் தொடர்கதையாகக் கூடாது. இவ்விடயத்தில் சர்வதேச சமூகம் தென்னிலங்கை அரசியல் சக்திகளிற்கு கடுமையான நெருக்குதல்களை கொடுத்து தமிழ் மக்கள் எமது தாயகத்தில் எம்மை நாமே ஆழக்கூடிய ஒரு சூழலை தோற்றுவிக்க வேண்டும். இல்லையேல் சமாதானத்திற்கு விடைகொடுத்து விட்டு அமைதியாக இருந்து நீதிக்காகவும் சுதந்திரத்திற்காகவும் தமிழ் மக்கள் போராடுவதற்கு ஆதரவளிக்க வேண்டும். இதுவே சர்வதேசத்தின் முன் உள்ள தற்போதைய கடமையாகும். தொடர்ந்து மௌனமாகவும் ராணுவ நெருக்குதல்களிற்கும் எத்தனை காலம்

தமிழ் மக்கள் முகங்கொடுத்து வாழ்வது. சிங்கள தேசத்தில் ஏற்பட்டுள்ள தற்போதைய அரசியல் கூட்டின் மூலம் பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது. இவை யுத்தத்திற்கு தயாராவதற்கான ஆயத்தமே ஆகும் இந்த நிலையில் தமிழர் தேசமும் தமிழர் தேசமும் சமாதானத்திற்கு விடை கூறி எமது இனத்தின் விடுதலைக்கான புனிதப் போரை ஆரம்பிப்பதே பொருத்தமானது. எனினும் உலக நடப்பிற்கேற்ப தமிழர்களின் தலைவர் பிரபாகரன் சாதுரியமான முடிவை எடுப்பார் என்பதில் தமிழ் இனத்திற்கு அசைக்க முடியாத நம்பிக்கையுண்டு.

**வான்முழக்கம்** தனது 5<sup>வது</sup> இதழில் நடத்திய "நினைவுகள்" என்ற சிறுகதைப் போட்டியில்

முதலாம் இடம் : நாளினி நாகேந்திரம்,
A/L யாழ் தேவரையாளி இந்துக் கல்லூரி.

இரண்டாம் இடம் : ம.தீபன்,
கோப்பாய் மகாவித்தியாலயம்.

மூன்றாம் இடம் : ந.குமார்,
நாகர்கோவில் மகாவித்தியாலயம்.

அன்பு வாசகர்களே!

**வான்முழக்கம்** இம்முறை "*நட்பு*" என்ற தலைப்பில் சிறுகதைப் போட்டி ஒன்றை நடத்துகிறது.

போட்டி முடிவுத்திகதி: **28.04.2004**

***பிரதம ஆசிரியர்,***
**"வான்முழக்கம்",**
284,பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

**என்ற முகவரிக்கு உங்கள் ஆக்கங்களை அனுப்பி பரிசில்களை வெல்லுங்கள்.**

# மின்னல்

★ யாழ்குடாநாட்டு பாடசாலைகள் சிலவற்றில் மாணவர்கள் மீது சில ஆசிரியர்கள் வஞ்சம் தீர்ப்பதாக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தங்களது சுயநலத்திற்காக மாணவர்களைத்தாக்கி இடமாற்றம் பெற்ற சம்பவமும் நடந்துள்ளது. எல்லாம் அந்த சிவனுக்கே வெளிச்சம்.

★ யாழ்குடாநாட்டுப் படைத்தளபதி சுசில் சந்திரபாலா மக்களின் குறைகளை களைவதற்காக யாழில் உள்ள ஒவ்வொரு பொது அமைப்புக்களாக சந்தித்து வருகின்றார். ஆனால் எந்தக் குறையும் இவரால் இதுவரை தீர்க்கப்படவில்லை என்பதே உண்மை. இவரின் உள்நோக்கம் புரியாமல் இவரை சந்திக்கும் யாழ்பிரமுகர்கள் முன்னைய யாழ்ப்பாண தளபதி சரத்பொன்சேகாவை விட இவர் பராவாயில்லை. என்றும் கூறுகினம். எல்லாம் இராணுவம்தான் என்பதை ஏன் எமது பிரமுகர்கள் மறக்கின்றார்கள்.

★ யாழ்ப்பாணத்தில் தன்னையும் ஓர் பத்திரிகையாளன் என்று கூறித்திரியும் ஒருவர் தினமும் பத்திரிகைகளை வாங்கி பிழைபிடிக்கும் தொழிலில் இறங்கியுள்ளார். வெளிநாட்டு ஊடகம் ஒன்றிற்கு செய்தி வழங்கக் கூடிய வாய்ப்பு இருந்தும் அத்தொழிலை விட்டு விட்டு இந்த புதுத் தொழிலை ஆரம்பித்துள்ளாராம். எல்லாம் அந்த பரம்பொருளிற்கே வெளிச்சம். பிந்திய தகவல் "பனிமழை" என்ற பெயரில் ஒரு இணையத்தளம் வரப்போகுதாம் இதுவும் வதந்தியோ தெரியவில்லை.

★ தென்னிந்தியா திரைப்பட நடிகர் மணிவண்ணண் யாழ்ப்பாணத்திற்கு வரமுன்னரே "சப்ரா" என்ற நிறுவனத்தை நடத்தி அதில் கொள்ளையடித்த பணத்தின் மூலம் பத்திரிகை நடத்தும் நிறுவனம் ஒன்று தனது அலுவலகத்தில் மணிவண்ணனை வரவேற்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டது. குறிப்பிட்ட பத்திரிகை கொள்ளையடித்த பணத்தில் இயங்குவதாய் கேள்விப்பட்ட மணிவண்ணண் அங்கு செல்வதை நிறுத்திக்கொண்டாராம். ஏதும் பழி பிடிக்கும் என்று பயந்தாரோ தெரியவில்லை. ஆனால் குடாநாட்டு மக்களின் கருத்து தென்னிந்திய நடிகர்களுக்கு எமது மண்ணில் வரவேற்புத் தேவையா என்பதே.

★ வடமராட்சியில் உள்ள தபால் நிலையம் ஒன்றில் சிலருக்கு வருகின்ற தபால்கள் மாயமாக மறைவதாய் மக்கள் புகார் தெரிவிக்கின்றனர். ஒரு தபால் நிலையத்தில் இருந்து இன்னோர் தபால் நிலையத்திற்கு எடுத்து வருகின்ற போது இத்தகைய மோசடி நடப்பதாக கூறப்படுகிறது. எதும் எலும்புக்கூடு உள்ளதா என்று சோதனை செய்கின்றார்களோ தெரியவில்லை.

★ யாழில் உள்ள பிரபல்யமான "இசைக்குழு" ஒன்றின் முதன்மையானவர் மாலை நேர

வகுப்புக்களை நடாத்தி வந்தாராம். இதனை தனக்கு சாதகமாக பயன் படுத்திய முதன்மையாளரின் மகன் ஒருவர் மாணவி ஒருவருக்கு வகுப்பு எடுக்க முற்பட்டுள்ளார் இதனால் மாணவி வைத்தியசாலையிலும் இவரின் மகன் சிறையிலும் இருந்தது பழைய கதை. புதிய கதை இப்போதும் ஏதோ நடக்குதாம் உரியவர்கள் கவனித்தால் சரி. அருணா,கிருணா என்று இசைமுழங்கி வருபவர்களை எப்படி நம்புவது என்பதே மக்களின் ஏக்கம்.

★ யாழில் உள்ள பிரபலமான பத்திரிகை என்று தனக்குத்தானே தம்பட்டம் அடிக்கும் பத்திரிகை மக்களின் பணத்தில் இயங்கும் பத்திரிகை. இது இவர்கள் இப்பொது புதுத்தொழில் ஒன்றை ஆரம்பித்துள்ளார்கள். குடாநாட்டில் உள்ள புதிய இராணுவத் தளபதியை யாழ்ப்பாண பிரமுகர் என கூறி புதுவருட செய்தி போட்டது மட்டுமல்ல. குடாநாட்டில் உள்ள ஒவ்வொரு செய்தியாளர் பற்றிய தகவல்களையும் ராணுவப் புலனாய்வுத்துறைக்கு வழங்கி வருகின்றார்களாம். இவர்களைத் திருத்த யாருமே முன்வரமாட்டார்களா என்பதே குடாநாட்டு பத்திரிகையாளர்களின் முணுமுணுப்பாகும். பாட்டா விற்பனையோடாவது புதுத் தொழில்களை நிறுத்துவார்களா...

★ ஜே.பி.பி க்கும் சுதந்திர கட்சிக்கும் இடையில் ஏற்பட்ட கூட்டை டக்ளஸ் வரவேற்றுள்ளாராம். கொள்கையில்லாத டக்ளஸ் எல்லாத்தையும் வரவேற்பார்தானே என்கின்றனர் மக்கள். அது சரி புதிய கூட்டு ஆட்சி அமைத்தால் அமைச்சர் ஆகலாம் என்று சிந்திக்கின்றாரோ.

## கவிதைப்பகுதி போட்டி முடிவுகள்

வான்முழக்கம் 5வது இதழில் "அன்பு" என்ற தலைப்பில் நடாத்திய கவிதைப் போட்டியில்

1.முதலாம் இடம்
சு.சிந்துஜன்
யாழ். இந்துக்கல்லூரி

2. இரண்டாம் இடம்.
ந.பிரணவன்
கிளிநொச்சி மகாவித்தியாலம்.

3.மூன்றாம் இடம்
த.சத்தியா
யாழ் வேம்படி மகளீர் கல்லூரி.

◈ **கவிதைப் போட்டியில் வெற்றி பெற்றோரிற்கான பரிசில்கள் அனுப்பி வைக்கப்படும்.**

## உலக அரங்கு

தொடர்-2

# ஒலாண்ட் தீவுகளின் சுயாட்சி

### சுயாட்சிக்கான சர்வதேசச் சட்ட அடிப்படை

1920இல் அப்போதுதான் புதிதாகச் சுதந்திரம் பெற்ற ஃபின்லாந்து அரசு ஒலாண்ட் மாகாணத்துக்குச் சுயாட்சி வழங்கியது (யுஉவ மே.124 ழக 1920). இந்த சட்டம் நிறைவேற்றப்படவும் சுயாட்சி வழங்கப்படவும் ஒரேயொரு காரணமே இருந்தது. அது என்ன? ஒலாண்ட் தீவுகளில் வாழும் சுவீடிஷ் மொழி பேசுகின்ற மக்கள் அனைவருமே தங்களது ஆள்புலமான ஒலாண்ட் தீவுகள் சுவீடனில் ஒரு பகுதியாக வருவதை விரும்புவதாகத் தமது கருத்தை ஏகமனதாக வெளிப்படுத்தியிருந்தார்கள் என்பதே இக்காரணமாகும். இதனைச் சரிசெய்யவே சுயாட்சி வழங்கும் முயற்சியில் ஃபின்லாந்து இறங்கியது. இத் தீவுகளின் மக்கள் அனைவருமே சுவீடிஷ் மொழி பேசுவபர்கள் என்பது எப்படி இருந்தாலும், இப்பகுதியில் தங்கள் நாட்டில் ஓரங்கம் என்றே ஃபின்லாந்து அரசாங்கமும் ஃபின்லாந்து மக்களும் மிக ஆழமான நம்பிக்கையை கொண்டிருந்தனர். இதற்கு வரலாற்று, புவியியல் காரணங்களை ஆதாரமாகக் காட்டுவர். இதன் காரணமாக இப்பிரச்சனையானது சுவீடனாலும் ஃபின்லாந்தினாலும் நாடுகள் அவையின் நிர்வாகக் கவுன்சிலுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

இக்கவுன்சிலானது தமது தீர்மானத்தை 1921 யூனில் வெளியிட்டது. இதன் படி, ஒலாண்டா ஆனது ஃபின்லாந்தின் இறைமையின் கீழ் இருக்க வேண்டும் என்றும் ஆனால், ஒலாண்ட் மாகாண மக்களின் சுவீடிஷ் மொழி, காலாச்சாரம், உள்ளூர் மரபுகள் என்பவற்றை பேணிப்பாதுகாக்க உத்தரவாதம் அளித்துச் சுயாட்சியை பலப்படுத்த வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஒலாண்ட் தீவுகளின் சுயாட்சி குறித்தும் அதனது சுவீடிஷ் பண்பியல்பு குறித்தும் ஃபின்லாந்திடம் இருந்து நாடுகள் அவையின் கவுன்சிலானது குறிப்பிட்ட சில உத்தரவாதங்களை கோரியிருந்தது. இந்த உத்தரவாதங்களை விரிவாக உள்ளடக்கிய விதத்தில் ஃபின்லாந்திற்கும் சுவீடனுக்கும் இடையில் ஓர் உடன்படிக்கை செய்யப்பட்டது. இது பின்னர் நாடுகள் அவையின் கவுன்சிலால் ஏற்றுக்கொள்ளப்பட்டது (யூன் 1921). ஃபின்லாந்தினால் சம்மதம் தெரிவிக்கப் பட்டதான உத்தரவாதங்களை கண்காணிக்கும் மேற்பார்வையாளர் பொறுப்பை கவுன்சில் தானே ஏற்றுக்கொண்டது. ஃபின்லாந்து

தானாகவே ஏற்றுக்கொண்ட இந்த சர்வதேச உத்தரவாதங்களை மதிக்கவில்லையென ஓலாண்ட் கருதினால் அது தனது முறைப்பாட்டினை ∴பின்லாந்து அரசாங்கத்தின் ஊடாக நாடுகள் அவையின் கவுன்சிலுக்கு அனுப்பும் உரிமை கொண்டிருந்தது. ஆனால் இந்த முறைப்பாடு ஓலாண்ட் மாகாண பாராளுமன்றத்தினாலேயே அனுப்பப்பட முடியும் ஓலாண்டின் சுயாட்சிக்கால வரலாற்றைப் பார்த்தால், நாடுகள் அவை செயற்பாட்டில் இருந்த காலமே மிகவும் ஸ்திரமற்ற காலப்பகுதியாக இருந்துள்ளது. அப்படியிருந்தும் மேற்சொன்ன விதமான முறைப்பாடு எதனையும் ஓலாண்ட் மாகாண பாராளுமன்றம் கவுன்சிலுக்கு அனுப்பியதாக தெரியவில்லை. ஒரு சில உடன்பாடின்மைகள் இருந்த போதிலும், ∴பின்னிஷ் அரசாங்கமும் ஓலாண்ட் மாகாணத்தின் பிரதான அமைப்புக்களும் தமது பிணக்குகளை கவுன்சிலின் உதவியின்றியே தீர்த்துக்கொண்டுள்ளன.

நாடுகள் அவை குலைந்து போனதை தொடர்ந்து அது அறிமுகப்படுத்தியிருந்த “சிறுபான்மையினர் பாதுகாப்பு முறைமை” என்பதும் நிலைகுலைந்தது. ஆனால் ∴பின்லாந்துதான் 1921ல் கொடுத்த தீர்வுக் கோட்பாடுகளை மதித்து நடக்க தவறியதேயில்லை.

இது தொடர்பான தனது உறுதிப்பாட்டினை தொடர்ந்தும் அந்நாடு வெளிப்படுத்தியே வந்துள்ளது. நடைமுறையில் பார்ப்பின் ஓலாண்ட் மக்களது சுயாட்சி உரிமையையும் சுவீடிஷ் பண்பியல்பையும் மதித்து நடந்து வந்திருப்பது மட்டுமன்றி அந்த சுயாட்சியை மேலும் வளர்ப்பதிலும் ∴பின்லாந்து கவனம் செலுத்தி வந்துள்ளமையை காணலாம். வழக்காற்றுச் சர்வதேசச் சட்ட உரைக்கற்களின் படி பார்ப்பின் ∴பின்லாந்துக்கு அத்தகைய கடப்பாடுகள் உள்ளது. என்பதை மறுப்பதற்கு இல்லை. வழக்காற்று சர்வதேசச் சட்ட அடிப்படையில் ஓலாண்ட் மக்களின் சுயாட்சியையும் அவர்களின் சுவீரிஷ் பண்பியல்பினையும் மதித்து நடப்பதே ∴பின்லாந்தின் அந்தக்கடப்பாடாகும். இதன் படி கடந்த எட்டு தசாப்தங்களாக ∴பின்லாந்து எதிர்கொண்டு இருக்கக் கூடிய சவால்களையும் அவை எங்கனம் சமாளிக்கப்பட்டன என்பதையும் ஆராய்தல் இங்கு அவசியமாகும்.

(தொடரும்...)

**V.T. தமிழ்மாறன்**
விரிவுரையாளர்,
சட்டபீடம்,
கொழும்பு பல்கலைக்கழகம்.

**பசியிருப்பவனுக்கு மீனைக்கொடுப்பதைவிட மீனைப்பிடிக்க கற்றுக்கொடுப்பதே சிறந்தது.**
-சீனப்பழமொழி-

மனிதமனங்கள் கலங்குவது
அணுகுண்டுகளாலல்ல
அன்பற்ற மனிதமனங்களால்.

# நாற்சந்தியில்......



திருநெல்வேலிச் சந்தியிலை நிண்ட இளசுகள் தேர்தலிலை இம்முறை யாருக்கு வாக்குப் போடலாம் என அலசிக்கொண்டிருந்தினம். இடையிலை ஒருவர் புகுந்து தேர்தல் கிடக்கட்டும் எங்கட சனம் இம்முறை ஏப்ரல் 2ம் திகதி நல்ல பாடம் புகட்டுவினம்.

அதைவிடுங்கோ யாழ்ப்பாணப் பத்திரிகையாளர் சங்கம் ஒண்டு இனவாதம் பேசுற தென்பகுதி பத்திரிகையாளர் சங்கம் ஒன்றோடை அல்லோ உறவு வச்சிருக்கினம் என இடையிலை இருந்த பனிச்சிவன் அண்ணை சொல்ல, உது தம்பி பெரிய ஆபத்தான விடயம் உவையள் உந்தக் கிழட்டு வயதிலை வடக்கு தெற்கு எண்டு புதிய சங்கமும் ஒண்டேல்லோ அமைச்சுப்போட்டினமாம். ஏற்கனவே இருக்கிற சங்கத்தாலை ஒண்டும் செய்ய ஏலாதவை இப்ப புதிய கூட்டும் சேர்ந்திட்டினமோ எண்டார் ஒருதர்.

அவையள் ஏற்கனவே "வட இலங்கையை" முன்னுக்குப் போட்டுத்தானே பேர் வைச்சிருக்கினம். இந்தப் பேரை வைச்சுக்கொண்டு என்னன்டு எங்கடை இனத்திற்காய் இவர்கள் குரல் கொடுப்பது என்றார் ஒருவர். இடையிலை அரசரத்தினம் அண்ணை இடைமறிச்சு உவையள் முந்தி நிண்டது டக்ளசின்ர ஓபிசிலை இப்ப ஆற்றேக்கை போறது எண்டல்லோ யோசிக்கினம். உவையள் எங்கட இனத்தின் மீது மதிப்பு இருந்தால் "வட இலங்கை" எண்ட சொல்லை நீக்கிப்போட்டு தங்கட சங்கத்திற்கு ஒரு புதுப்பேர் வைக்கட்டும் பார்ப்போம்.

அது சரி வட இலங்கை எண்டு அவர்களின் நியாயப்படி பார்த்தாலும் யாழ்ப்பாணத்தைவிட வேறை எங்கயாவது ஒரு சங்க உறுப்பினரை வச்சிருக்கினமோ. முன்னர் யாழ்ப்பாணராணுவத் தளபதி சரத்பொன்சேகாவிற்கு எதிராய் யாழ்ப்பாண ஊடகவியலாளர்கள் சங்கம் போராட்டம் ஒன்று நடத்தினபோது அதற்கு ஏதிராய் சரத் பொன் சேகாவிடம் மன்னிப்புக்கேட்டவர்கள்தான் அதில் உள்ள கூட்டத்தினர். அவர்களால் உருப்படியாய் எதுவும் செய்யமுடியாது. அறிக்கை மட்டும் ஒழுங்காய் விடுவார்கள். அறிக்கையும் முன்னால் பழைய சப்றா இப்ப பிரபலமான பத்திரிகையும் வர்த்தமானிப் பத்திரிகை

என்ற பெயர் எடுத்த பத்திரிகையுமே அறிக்கைகளை எழுதி தாங்களே பிரசுரிக்கினம். இதை விட யாழில் இறுதியாக வந்த பத்திரிகை ஒன்றில் ஆசிரிய பீடத்தில் இருப்பவரும் இவர்களிற்கு தனிமுக்கியத்துவம் கொடுத்து வாறார்.

அது சரி இந்த வாலுகள் தலைவர்கள், சப்றாகாறார் எல்லாம் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்ட காலப்பகுதியில் அவரின் இறுதிநாள் நிகழ்வில் கூட அஞ்சலி உரை நிகழ்த்த பயந்தவர்கள்தான். இன்றைக்கு நிமலராஜனுக்காக ஏதோ குரல் கொடுப்பதாய் போலி வேசம் போடுகிறார்கள். இப்போது ஆசிரிய பீடங்களை அலங்கரிப்பவர்கள் அன்று ராமமூர்த்தி, ராமேஸ்வரனின் வாசலை அலங்கரித்தவர்கள்தான். இன்று நிமலராஜனைப் பற்றி பேசுபவர்கள் அன்று ஈ.பி.டி.பி யிடம் ஜெனரட்டர் வாங்கி தமது நிறுவனத்தை வளர்த்தவர்கள் தான். இதைவிட ஒரு கூட்டம் நிமலராஜனை தமது நண்பர்கள் என கூறி அவருடன் தாம் புகைப்படம் எடுத்ததை ஏல்லோருக்கும் காட்டிபெருமையடித்து திரிகிறார்கள்.

ஐயா ஒரு பத்திரிகையாளன் மரணம் அடைந்த போது அதை துணிவாக ஈ.பி.டி.பி தான் செய்தார்கள் என்று கூற துணிவில்லாத உங்களிற்கு ஒரு சங்கம் இதெல்லாம் தேவையா? பத்திரிகையாளர்கள் அச்சுறுத்தப்படும் போது பௌத்த துறவி மாருக்கு வால் பிடிப்பது தேவையா? இவர்கள் எல்லாம் எப்ப திருந்துவார்கள்? இனத்திற்காகவும் விடுதலைக்காகவும் எப்ப இதய சுத்தியுடன் குரல் கொடுப்பார்கள் என்றார் அவர்.

இடையிலை கந்தையா அண்ணை குறுக்கிட்டு இவையின்ர கோமாளித்தனத்திற்கு இங்குள்ள பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுக்கும் வரை இவர்கள் திருந்த மாட்டார்கள் கந்தையா அண்ணை பொழுதுபடுகுது பனிவரப்போகுது வெளிக்கிடுவம் எண்டு கனகண்ணை வெளிக்கிட கூட்டமும் கலைந்தது நானும் உலகத்தை நினைத்து சிரித்த படி வெளிக்கிட்டேன்.

●●●●●●●●●●●●●



பொருளாதாரத்தடை

**இன அழிப்புத்தத்தின் வகைகளில் இதுவும் ஒன்று.......**



# தமிழவன் கேள்வி பதில் பகுதி



**த. கந்தையா,**
**கள்ளப்பாடு,**
**முல்லைத்தீவு.**

கேள்வி: தமிழவனே! புதிய தேர்தல் யாருக்கு நன்மை?

பதில்: புதிய தேர்தலால் இலங்கைக்கே பாதிப்பு. தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் யார் ஆட்சிக்கு வந்தாலும் எமது மக்களின் உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டு நீதியான தீர்வு கிடைத்தாலே எமக்கு நன்மை.

**க. இந்துமதி,**
**பளை.**

கேள்வி: புதிய தேர்தல் முடிந்த பின் யுத்தம் வெடிக்குமா?

பதில்: விடுதலைப் புலிகள் சமாதானத்தின் மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். இந்த நிலையில் மீண்டும் தென்னிலங்கை சக்திகள் தமிழ் மக்கள் மீது யுத்தத்தை திணித்தால் புலிகளையும் யுத்தத்தில் ஈடுபடுமாறு தமிழ் மக்கள் வற்புறுத்துவார்கள்.

**பீ. பிரசாந்,**
**குட்ச்றோட்,**
**வவுனியா.**

கேள்வி: இம்முறை தேர்தலின் பின் டக்ளஸ் அமைச்சர் ஆவாரா?

பதில்: இந்தக் கனவு அவரிடமும் இருக்கலாம். அமைச்சர் ஆனால் என்ன?, இல்லாவிட்டால் என்ன? துரோக நடவடிக்கையில் தொடர்ந்தும் ஈடுபட்டுத்தானே வருகிறார். இது பேரினவாத சக்திகளிற்கு விசுவாசமான வேலைதானே. ஈ.பி.ஆர்.எல்.எப் சுரேஸ்பிரேமச்சந்திரனைப் பார்த்தாவது டக்ளஸ் திருந்தக்கூடாதா?

**க. சாந்தினி,**
**கட்டைக்காடு.**

கேள்வி: தமிழனுக்கு எப்போது விடிவு கிடைக்கும்?

பதில்: விரைவில் கிடைக்கும். அதுவும் தமிழ் இனத்தின் தலைவர் மேதகு பிரபாகரன் காலத்திலே கிடைக்கும்.

**த. சத்தியா,**
**உடுப்பிட்டி.**

கேள்வி: தமிழவனே! காதல் புனிதமானதா?

பதில்: ஆம்!, காதல் புனிதமானதுதான் இதை உதாசீனம் செய்பவர்கள் வருந்துவதுண்டு.



**செ. வதுஜா,**
**பளை மத்திய கல்லூரி.**

கேள்வி: தமிழ் இனத்தின் துரோகிகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?.

பதில்: இவர்கள் தமது சுய நலத்திற்காக எமது இனத்தை விலை பேசுபவர்கள். இவர்களுக்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் தமிழினம் மன்னிப்பு வழங்கக்கூடாது.

**அ. புனிதன்,**
**நீர்வேலி.**

கேள்வி: வீட்டிற்கு விருந்தினர்களாக செல்வோரை அவமதிப்போர் பற்றி...

பதில்: இவர்களிடம் திருக்குறளை கொடுங்கள். முதலில் வாசிக்கட்டும் பின்னர் கொஞ்சம் புத்தி சொல்லிப்பாருங்கள். சிலர் திருந்துவார்கள். சிலர் திருந்தவே மாட்டார்கள்.

**க.பவன்**
**மாணிப்பாய்.**

கேள்வி: பல்கலைக்கழகங்களில் தற்போதும் மறைமுகமாக பகிடிவதை நடக்கிறதாமே!

பதில்: யாழிலும் இது நடப்பதாக தகவல். உரியவர்கள் உரிய முறையில் இவற்றைக் கவனிப்பார்கள்.

**கே.ஜீவகதாஸ்,**
**சாவகச்சேரி.**

கேள்வி: மொட்டைக் கடிதம் போடுவோர் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: இவர்கள் என்றைக்குமே சமூகத்தில் முன்னிற்கு வரமாட்டார்கள் இவர்களை துணிவில்லாத முட்டாள்களாகவே நான் கருதுகிறேன்.

# உலகமயமாக்கல்

உலகமயமாக்கல் என்பதற்கு பல்வேறு வரைவிலக்கணங்கள் கூறப்பட்டபோதும் பொதுவாக எல்லோராலும ஏற்றுக்கொள்ளப்பட்டதாக பின்வரும் வரைவிலக்கணம் காணப்படுகின்றது. உலகமயமாக்கல் என்பது உலகிலுள்ள நாடுகளுக்கிடையில் ஏற்படும் சமூக,பொருளாதார, அரசியல், கலாசார ரீதியிலான ஒருங்கிணைப்பு எனலாம். இதனையே சமூகவியலாளர்கள் மேலைத்தேச மயமாக்கல் என்றும், பொருளியலாளர்கள் உலகமயமாக்கல் என்பது முதலாளித்துவத்தின் இன்னொருவடிவம் என்றும் கூறுகின்றார்கள்

எது எவ்வாறாக இருந்தபோதும் இந்தஉலகமயமாக்கல் என்பது எப்போது ஆரம்பமானதென நாம் அவதானிப்போமானால், எப்போது குடியேற்ற வாதம் ஆரம்பமானதோ அப்போதே உலகமயமாக்கல் ஆரம்பித்துவிட்டதெனலாம். ஆரம்பத்தில் போர்த்துக்கேயர் கீழைத்தேய நாடுகளைக் கைப்பற்றி அவற்றில் காணப்பட்ட தமக்குத் தேவையான பொருட்களைத் தம் நாட்டிற்கு எடுத்துச் சென்றனர். அடுத்து வந்த ஒல்லாந்தர் கீழைத்தேச நாடுகளில் இருந்து வளங்களைச் சுரண்டிச் சென்றபோதும் அந்நாடுகளில் நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கிச் சென்றனர். இறுதியாக வந்த ஆங்கிலேயர்கீழ் நாடுகளில் பொருளாதாரக்கீழ்க்கட்டமைப்புவசதிகளையும் பெருந்தோட்டங்களையும் உருவாக்கி பெருந்தோட்ட உற்பத்திப் பொருட்களைத் தம் நாட்டிற்கு எடுத்துச் சென்றார்கள். இருந்தபோதும் ஆங்கிலேயருக்கு எதிராக போராட்டங்கள் வலுப்பெற்று "எமது வளத்தைச் சுரண்டாதே", "நாட்டைவிட்டு வெளியேறு" என்ற தொனியிலமைந்த நெருக்கடிகள் அதிகரித்ததன் விளைவாக ஏறத்தாழ 60 ஆண்டுகளுக்கு முன் குடியேற்ற வாத நாடுகள் தமது குடியேற்ற நாடுகளைத் சுதேசிகளிடம் ஒப்படைத்து தமது நாட்டிற்குத் திரும்பிச் சென்றன.

இங்ஙனமாக குடியேற்ற வாதநாடுகள் வெளியேறிய பின் 3ம் உலக நாடுகளை சுதேசிகள் ஆட்சிசெய்யும்போது அவர்கள் அபிவிருத்தியடைவதற்கு மூலதனம் பற்றாக்குறையாக இருந்தது. இந்நிலையில் இவை குடியேற்றவாத நாடுகளான அபிவிருத்தியடைந்த நாடுகளின் உதவியைக் கோரின. அபிவிருத்தியடைந்த நாடுகள் நேரடி முதலீடுகளாகவும், பட்டியலிடப்பட்ட முதலீடுகளாகவும் உதவிகளை வழங்கின. இவ்வாறு உதவி வழங்கும்போது அவை நிபந்தனைகளையும் விதித்தன. இதன் மூலம் உலகமயமாக்கல் வேறொரு பரிணாமம் பெற்றது. இதன் பின்னர் தாராள மயமாக்கல், திறந்த

பொருளாதாரக் கொள்கைகள் என்பவற்றின் மூல உலகமயமாக்கல் துரிதமாக அபிவிருத்தியடைந்து 3ம் உலகநாடுகள் அபிவிருத்தியடைந்த நாடுகளில் தங்கியிருக்கும் நிலையை உருவாக்கின.

**உலகமயமாக்கலைத் தூண்டும் காரணிகள்.**

1.பல்தேசியக் கம்பனிகளில் இலாபமதிகரித்து மூலதனத்திரட்சி ஏற்பட்டமை. இதனால் இம் மூலதனத்தை ஏனைய நாடுகளில் முதலீடு செய்கின்றமை.

2.அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் காணப்பட்ட மூலதனப் பற்றாக்குறை.

3.தொடர்பாடல், போக்குவரத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்கள்.

**உலகமயமாக்கலை முன்னெடுத்துச் செல்லும் நிறுவனங்கள்**

1.சர்வதேச நாயண நிதியம் (IMF)

2.உலக வங்கி (IBRD)

2.உலக வர்த்தக ஸ்தாபனம் (WTO)

இந்நிறுவனங்கள் உதவி வழங்கும்போது போடும் நிபந்தனைகள் உலகமயமாக்கலை அபிவிருத்தியடையச் செய்கின்றன. அதாவது ஏற்றுமதி, இறக்குமதி வரிகளைக் குறைக்குமாறு கூறுதல், பொதுமக்களுக்கு அரசினால் வழங்கப்படும் இலவச சேவைகளை நிறுத்துமாறு கூறுதல், அரசினால் வழங்கப்படும் மானியங்களைக் குறைக்குமாறு கூறுதல், கீழ்க்கட்டுமான வசதிகளை அதிகரிக்குமாறு கூறுதல், வெளிநாட்டு வியாபாரத் தடைகளை நீக்குமாறு கூறுதல் போன்றன.

**உலகமயமாக்கலின் படிநிலைகள்.**

i) குடியேற்ற வாதம் - இராணுவ ளரீதியாக நாடுகளை ஆக்கிரமித்து அவற்றின்வளங்களைச் சுரண்டியமை

ii) சுதந்திரத்தின் பின் சுதந்திரமடைந்த நாடுகளில் உருவாகிய மூலதனப் பற்றாக்குறையும், கடன் பிரச்சனைகளும்.

iii) 1973ம் ஆண்டின் பின்னரான காலம்.

அ) 1973இற்கும் 1990இற்கும் இடைப்பட்ட காலம். இக் காலத்திலே நாணய மாற்றுவீதம் மிதக்கவிடப்பட்டது.

ஆ) 1990 இற்குப் பின்னரான காலம். 1990இல் இரு வல்லரசுகளுக்கும் இடையில் நடந்த பனிப்போரில் ஒரு வல்லரசு வெற்றியடைந்தது. இதனால் வெற்றியடைந்த வல்லரசான ஐக்கிய அமெரிக்கா மற்றைய நாடுகளில் தனது காலை ஊன்றுவதற்கு உலகமயமாக்கலினை ஒரு கருவியாக பயன்படுத்த ஆரம்பித்தமை.

**உலகமயமாக்கலின் நன்மைகள்.**

I. பொருளாதாரத்தில் தொழில் முயற்சியாளர்களுக்கிடையிலான போட்டியானது வளங்களின் வினைத்திறமையான ஒதுக்கீட்டிற்கு வழிவகுக்கும்.

II. இதன் மூலம் தரமான பொருட்கள் மலிவான விலைகளில் கிடைக்க வழி ஏற்படும்.

III. ஏற்றுமதி அதிகரிக்கும்

IV. தொழிநுட்பம் முன்னேற்றமடையும்.

V. பொருளாதார வளர்ச்சி ஏற்படும்.ஏற்றுமதி அதிகரிக்கும்.

(தொடர்ச்சி..22ம் பக்கம்)

## கவிதைப்பகுதி

### மனிதம் மனிதமாக வேண்டும்.

செத்துக் கொண்டிருக்கும்
மனிதங்களுக்கிடையே
மனிதங்களைக்காக்க
துடிப்பவனே!
நீ ஏன் மந்தியாய்
மாறி போனாய்

இதோ பார்
உன் வாழ்க்கை வானில்
வலம் வர
நீண்ட வரிசையில்
வாலிபப் பறவைகள்
காத்திருப்பதாய் நினைக்கலாம்.
ஆனால் என் வாழ்க்கையின்
வாசலில் மந்திகளாய் இல்லாது
மனிதங்களாய்
சில வாலிபப் பறவைகள்.

உன் எண்ணங்களை
நீ மௌனத்தில் பொத்திவைத்தாலும்
உன் விழிகளில் தெரிகிறதே
உன் மனிதம் தொலைந்து விட்ட விலாசம்.

மனிதர்களுக்குள் மனிதத்தை தேடும் நீ
ஏன் உன் மனிதத்தை தொலைத்தாய்
நீ தெலைத்த மனிதம்
முகவரி தேடி அலைகிறது.
தொலைந்து போன மனிதம்
உன்னை வந்து சேர
உன் முகவரியை விலாசப்படுத்து
ஏனெனில்
உன் தொலைந்து விட்ட
மனிதத்துடன்
உன்னையும் சேர்த்து
தேடிக் கொண்டிருப்பது
நான் மட்டுமல்ல
மண்ணும் தான்............!

**நீர்வையின்-**
**இள[illegible]மொட்டு-**

## வாழ்த்துக்கள்




என் கனவில் கதை தந்தவன் நீ
என் உயிரிந்கு உயிர் தந்தவன் நீ
ஆனால் உன் கனவிந்கு என்னால்
கதை தர முடியவில்லை
உன் உயிரிந்கு உயிர் தர
முடியவில்லை.
ஆனால் உன் ஆனந்தக்கண்ணீர்
என் நினைவுகளில் என்றும் நிழலாடும்.
ஆனால் உன் கனவிந்கு என்னால்
கதை தர முடியவில்லை
உன் உயிரிந்கு உயிர் தர
முடியவில்லை.
ஆனால் உன் ஆனந்தக்கண்ணீர்
என் நினைவுகளில் என்றும் நிழலாடும்.

அன்று நீ இன்னொருவன் சொந்தம்
ஆகியதாய் கேள்விப்
பட்டவுடன் உன்னை வாழ்த்த
வேண்டும் என்று
துடித்தேன் ஆனால் முடியவில்லை
ஆனால் இனி ஒரு ஜென்மம்
இருந்தால் உன்னை நான் வாழ்த்த
மாட்டேன் இருவரையும்
எல்லோரும் வாழ்த்துவார்கள்

தனா,
கந்தர்மடம்.

- கடற்கரை மணலில் கட்டப்படும் கோட்டைகள்
  சிறுபிள்ளைகள் விளையாட்டிற்கே பொருத்தமானது.
- சமாதானம் என்பது பலாத்காரத்தால் அடக்கிய வைக்கக் கூடியதல்ல
  ஒருவரை ஒருவர் உணரும் நிலையிலேயே அதைப்பெறஇயலும்
- புரிய வேண்டியதை தவறாக புரிவதைவிட
  புரிந்துகொள்ளாமல் இருப்பதே மேலானது.



## துணிந்து நில்

எம் நாட்டு மக்களே!
இளைஞரே! பெரியோரே!
வீரத் தமிழினமே!

எம்நாட்டை ஈழத்தை
எழில் நாட்டை பொலிவேட்டை
இழந்து நாங்கள்

மண்மீது மண்ணாகி
மடிவோமோ விடிவெம்மை
நெருங்கிடாதோ?

கண்ணான கண்ணே
கருவிளியே கவியுலகே!
கவலை தள்ளு நீ

மண்ணாளுங் காலம்
வரும் விரைவில் பெருந்துயரேன்
துணிந்து நில்!

எழிலினி சிவராஜா,
யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி,
2005 கலைப்பிரிவு.

## அளவாக பேசு!

அந்த நாள் தொடங்கி, மக்கள்
அனைவரும் ஒன்றாய் கூடி!
வெந்ததைத் தின்று ஏனோ
வெறுங்கதைகள் பேசி!
சிந்திய பொழுது ஒன்றா?
சிந்திப்பாய் மானிடனே!
இந்த நாள், எதிர் காலத்தை
ஆக்குவோம் இனிது வா!

சி.துளசிதா 7C
யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

## அகதி



காரணம் இன்றி படைகள் நிதம்நிதம்
வெறியாட்டம் ஆடி வேட்டுக்கள் தீர்க்க
செல்லிலால் வீடுகள் சிதறிட
அதனால்
ஏங்கிய மக்கள் அணை துணை இன்றி
அலைந்ததனால் அகதி என்ற பெயர் பெற்றோம்
உண்மைணை உணர்ந்து ஒற்றுமையாகி
யாவரும் ஒன்றாய்
நாட்டை காத்து
நலம் பெற வேண்டும்
போர் பறை அற்று
அமைதிப் பறை முழங்கி
நம் எதிர்பாலம்
மிளிர்ந்திட வேண்டும்
பதைமை பொறாமை
பதவி வேட்கை
அவை எல்லாம் நீங்கி
அகதிகள் என்ற
கொடும் பெயர் எமது
அகராதியில் நீங்க
அயராது உழைப்போம்

ஆக்கம்.
செல்வி.நாளினி நாகேந்திரம்
க.பொ.த உயர்தரம்.
யா/தேவரையாளி இந்துக்கல்லூரி.

## மோனாலிசாவின் புன்னகை.......

மோனாலிசாவின் புன்னகை பல விவாதங்களை தோற்றுவித்துள்ளது. அவள் சிரிப்பது புன்சிரிப்பா, அல்லது வேதனைச்சிரிப்பா? மோனாலிசாவும் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. அமெரிக்காவைச்சேர்ந்த வைத்தியரும், சித்திர விற்பனருமாகிய பொர்கோவஸ்கியின் கூற்றுப்படி அவளுடைய உடல்தோற்றம் அவள் பலபற்களை இழந்தவளாகக் காட்டுகிறதாம்.

டாவின்சி வரைந்த ஓவியத்தை பெருப்பித்துப்பார்த்ததில் அவளுடைய வாயைச்சுற்றி தழும்பு இழையங்கள் இருப்பதாகத் தெரிகிறதாம்."அவள் புன்னகை பூக்கவேயில்லை. அவமுடைய முகம் கொண்டிருப்பது முன்பற்களை இழந்தவர்கள் கொண்டிருக்கும் முகபாவனைதான் அது" என்று கூறுகிறார் பொர்கோவஸ்கி.

# பாரம்பரிய கல்வியை விஞ்சும் இணைய வழிக்கல்வி



கற்கால மனிதன் தன் சந்ததியினரின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு தன் அனுபவங்களை அவர்கட்குடுத்துரைத்தான். இது கல்வி முறையாக மாறியது. இதில் இருந்து தொடங்கிய கல்விமுறை படிப்படியாக பலரின் அனுபவங்களையும் அனுமானங்களையும் கொண்ட மேலும் வளர்ச்சியடைந்தது. அதன் பின் சிறு சிறு ஆணய்வுகளால் மேலும் பல தகவல்களைப் பெற்று குருகுல கல்வி முறையாக திரிபடைந்துது. இது மேலும் வளர்ந்து பாடசாலை, கல்லூரி, பல்கலைக்கழகம் என்றவரைக்கம் வளர்ந்து நிற்கிறது. இவ்வாறு வளர்ந்திருக்கும் கல்வி முறையின் இன்னுமொரு வடிவமாக, பல்வேறு துறைகளிலும் பல்பேற்பட்ட மக்களும் பயன் பெறும் வகையில் இணையத்தினூடாக இது இணைய வழிக்கல்வியாகியது.

இணையம் என்பது பல கணனி வலைப்பின்னல்களின் வலைப்பின்னல் ஆகும். அதாவது பல்வேறு பிரதேசங்களிலுள்ள கணனிகளை ஒன்றிணைத்து தகவலை பரிமாறக்கூடிய வகையில் அமைக்கப்பட்ட ஒரு வலைப்பின்னலாகும். இந்த தகவல் பரிமாற்றமானது. ஒரே நேரத்தில் உலகத்தின் எந்தப் பாகத்திலிருந்தும் மேற்கொள்ளக் கூடிய வகையில் தொலைபேசி கம்பியினூடாக சாத்தியமாக உள்ளது.

கற்காலத்தில் இருந்து வளர்க்கப்பட்ட பாரம்பரிய கல்வி முறையைக் கருதினால் அதில் ஆசிரியர், மாணவர் நேரடித் தொடர்பு காணப்படுகிறது. அது மட்டுமல்லாமல் நேரடிக் குழுத்தொடர்பாடல் முறையால் மேலும் மாணவர்கள் தங்கள் அறிவினை பகிர்ந்து கொள்ளக்கூடிய வாய்ப்புக் காணப்படுகிறது. அத்துடன் ஆசிரியரிடமிருந்து நேரடி ஊக்குவிப்பு கொடுக்கப்படுகின்றது. இதுபோன்ற சில காரணங்களாலேயே இன்னமும் பலர் இக்கல்வியை நாடுகின்றார்கள்.

இணைய வழிக் கல்வி முறையால் நேரடித் தொடர்பு தற்போது இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் சாத்தியமற்று இருந்தாலும் இடனடி மின்னஞ்சல் தொடர்பு சாத்தியமாக இருக்கின்றது.



இதனூடாக மாணவர்கள் ஒரு சில நிமிடங்களில் தங்கள் ஐயங்களை மிக இலகுவாக தெளிவுபடுத்த முடியும்.

குழுத் தொடர்பாடல் முறையானது இணைய வழிக்கல்வியில் சாத்தியமாகாது என பலர் கருதக்கூடும். ஆனால் இணையத்தினூடாக மாணவர்கள் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ளக்கூடியதாக அமைக்கப்பட முடியும். இதனால் நேரடி குழுத் தொடர்பாடல் முறையால் ஏற்படும் நன்மையைக் காட்டிலும் அதிகமாகப் பெறமுடியும்.

இணையவழி முறையால் மாணவர்களின் அறிவுத்திறன் பரீட்சிக்கப்பட்ட முடியும். எவ்வாறெனில், இம் முறையில் கற்பிக்கப்படும். பாடங்களின் முடிவுகளில் சய மதிப்பீட்டு வினாக்களைக் கொடுத்து அதன் பெறுபேறுகளை அடிப்படையாக வைத்து அம் மாணவர்களுக்குத் தகுந்த பாராட்டையோ ஆலோசனைகளையோ இணையத்தினூடாகவே வழங்க முடியும்.

தற்போது இணையவழிக் கல்விமுறையில் பரீட்சைகள் மிக இலகுவாக நடாத்தப்படுகின்றன. இதனால் பரீட்சை நடத்துவதில் பொதுவாக இருந்துவரும் நடைமுறைச் சிக்கல்கள் நீர்க்குமிழியாகின. இதனால் ஏற்படும் பண விரையங்களும் பெருமளவிற்கு இல்லாதொழிகிறது.

மாணவர்கள் ஓர் குறிப்பிட்ட துறையில் மட்டுமன்றி பரந்ததொரு அறிவை உடையவர்களாக இருக்க இது வழிவகுக்கும். உடனுக்குடன் புதிய தகவல்களையும் புதிய கண்டுபிடிப்புகளையும் வழங்கலாம். இதனால் அவர்களின் ஆற்றல் மேலும் பெருக வாய்ப்புண்டு.

எல்லாவற்றுக்கும் மேலாக, தொலைக் கல்வி முறை வரம்பற்று சாத்தியமாகிறது. அதாவது ஓர் நாட்டில் இருந்து இன்னுமொரு நாடு சென்று படிக்கும் வாய்ப்பு எல்லோருக்கும் கிடையாது என்பது முடியாத விடயம். அவ்வாறு இருக்க வேறு நாட்டில் உள்ள கல்லூரிகளிலோ, பல்கலைக் கழகங்களிலோ படித்துப் பட்டம் பெறும் வாய்ப்பை எல்லோருக்குமே அளிக்கும் ஒரே ஒரு முறை இணைய வழிக்கல்விதான் என்றால் மிகையாகாது.

இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் நிலவும் மூலதனக் குறைவாடு (ஆசிரியர், தளபாடம், கருவிகள், இடம், பணம், புத்தகம்) காரணமாக தான் விரும்பும் கல்வியைக் கற்க அனுமதி கிடைக்காமல் ஏறமாற்றமடையும் மாணவர்களுக்கு இது ஓர் வரப்பிரசாதமாகும். தற்போது உலகில் எங்கு பார்த்தாலும் மதிப்பெண்ணை அடிப்படையாகக் கொண்டு வடிகட்டல் முறையால் மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகின்றது. இதில் வடிகட்டியது போக மீதி மாணவர்களின் நிலமையை சற்றே சிந்தித்துப் பார்க்குமிடத்து அவர்களின் பொன்னான எதிர்காலம் மழுங்கடிக்கப்படாமல். அவர்களை தோள் கொடுத்து அவர்கள் எதிர்பார்த்த வாழ்க்கையை வாழ வழிவகுக்கிறது.

உழைத்துக் கொண்டே கல்வி கற்கும் தேவை இப்போது

உலகில் இன்றியமையாததொன்றாக மாறிவிட்ட நேரத்தில் வேலைக்கு சென்றுவிட்டு பின் தனது கல்விக்காக மறுபடியம் கல்லூரி, பல்கலைக்கழகம் என பிரயாணம் செய்து இயந்திரம் போல் சுழன்று கொண்டே இருக்கும் மனிதனுக்குத் தன் உடடலுக்கு வேலையைக் குறைத்தது இதனால் மன நிம்மதியொடு வீட்டிலோ அல்லது அருகில் இருக்கும் தகவல் மையங்களிலோ தன் படிப்பை இலகுவாக கற்றுக் கொள்ள இம்முறையை விடச் சிறந்த முறை எதுவுமே இல்லை எனலாம். அத்துடன் பணம், காலம் என்பன மிச்சப்படுத்தப்படுகின்றது.

மாணவர்களின் தற்போதைய கல்வி முறையை எடுத்துப் பார்த்தால் அதில் அவர்கள் விரும்பியோ விரும்பாமலோ இதைத்தான் படிக்க வேண்டும் என்ற ஓர் அழுத்தம் காணப்படுகிறது. இதனால் ஓர் மாணவன் தனது சுயவிருப்பத்தை விட்டுவிட்டு சமுதாயத்தின் அழுதததால் இன்னுமோர் துறையில் கல்வியைக் கற்க ஆரம்பிக்கிறான் இதன் விளைவால் அவன் அத்துறையில் சிறந்தவிளங்க வாய்ப்புக்கள் குறைவாகவே காணப்படுகின்றது.

சில துறைகளில் செய்முறைகள் என்பது இன்றியமையாதன. உதாரணமாக இரசாயனம்,தாவரவயல், விலங்கியல். இயந்திரவியல், மருத்துவம் என்பன இப்படிபட்ட சந்தர்ப்பங்களில் கூடி செய்முறை விபரங்களை ஒளி-ஒலிப்பதிவு செய்து இணையத்தினூடாக வழங்க முடியும். இதனை மாணவர்கள் இலகுவாகப் பார்த்தும் கேட்டும் கற்றுக்கொள்ளலாம். இதே வேளை தங்கள் வீடுகளிலலுலோ அல்லது கடைகளிலோ செய்முறைக்குத் தேவையான உபகரணங்கள் அல்லது பொருட்கள் இலகுவாக கிடைக்குமேயானால் அவர்கள் அச் செய்முறையை தாங்களே வீட்டில் இருந்த வண்ணம் செய்து அதில் தேர்ச்சி பெற வாய்ப்புண்டு.

உயர்கல்வி கற்பிக்கப்படும் பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரிகளில் மாணவர்கள் பூரண அறிவை பெற வேண்டும் என்பதற்காக ஆசிரியர்கள் சுய வாய்ப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து ஊக்குவிக்கிறார்கள். இதனால் மட்டுமே ஒரு மாணவன் ஆசிரியரிலும் பார்க்க கூடிய அறிவு ஆற்றலைப் பெறமுடியும். மாணவனின் சுய வாசிப்புத்திறன் குறையும் போது அவன் ஓர் எல்லைக்கு மேல் அறிவைப்பெற முடியாதவன் ஆகிறான். எனவே சுய வாசிப்புத்திறன் ஆனது இணைய வழிக்கல்வி முறையில் முற்று முழுதாக வளர்க்கப்படுகிறது. எனவே மாணவனின் அறிவுத்திறன் வரையறையின்றி வளர்த்துக்கொண்டே போகும்.

இணையவழிக் கல்வி முறையில் ஆங்காங்கே ஒருசில வசதியீனங்களும் குறைபாடுகளும் காணப்படுகின்றன. உதாரணமாக சில நாடுகளில் இன்னமும் கணனிகளின் பாவனையோ அல்லது கணனி வலைப்பின்னல்களின் பாவனையோ மிகவும் அரிதாக காணப்படுகின்றது. அதுமட்டும் அல்லாமல் ஏழை மக்கள் கணனியை வாங்கவோ அல்லது கணனி மையங்களில் சென்று கற்கவோ முடியாது போகிறது. இருப்பினும் எதிர்காலத்தில் கணனிகள் மிகவும் மலிவாக ஏழைமக்களாளும் வாங்கக்கூடிய

நிலைக்கு வரும் என்பது அதன் வளர்ச்சியின் வேகத்தில் இருந்து ஊகிக்க முடிகின்றது. ஏனவே எதிர்காலத்தில், உலகின் எப்பாகத்திலும் உள்ள மக்கள் இவ்வசதியை பெற்று தங்கள் சுய ஆற்றலையும் மற்றும் அறிவுத்திறனையும் மேன்மேலும் மேம்படுத்த இக்கணனி – வழிக் கல்வி பெரிதும் பங்காற்றும்.

இக்கல்வி முறையில் ஆசிரியர் உடனான உடனடித் தொடர்புகள் மேலும் வலுவாக்கப்பட்டு மேலும் தெளிவான இலகுவான முறையில் கல்வி கற்பிக்கப்படுமேயானால் எதிர்காலத்தில் உருவாகும் மாணவர்கள் மாபெரும் அறிஞர்களாகவும், புதிய படைப்பாளிகளாகவும் ஆவார்கள் என்பதில் சற்றேனும் ஐயமில்லை.

# அரசியல்வாதி

என்னோடு வாருங்கள் காரில் பேசிக்கொண்டே போகலாம் என்று பத்திரிகையாளர் நிகில் சக்கரவர்த்தியை ஜம்மு கஷ்மீர் மாநிலத்தின் முன்னாள் முதல்வர் பக்ஷிகுலாம் முகமது ஒருமுறை அழைத்தார். நிகில் சக்கரவர்த்தியும் ஒப்புக்கொண்டார்.

காரில் ஏறிய போது, நிகில் சக்கரவர்த்தியை பின்பக்கம் ஏறிக்கொள்ளச் சொல்லிவிட்டு பக்ஷி காரின் முன்பக்கத்தில் ஒட்டுநர் இருக்கைக்கு அருகில் அமர்ந்து கொண்டாராம்.

ஒட்டுநர்(Driver) போன்ற உழைப்பாளிகளுடன் தமக்குள்ள நெருக்கத்தைக் காட்டுவதாகவே முதல்வர் முன் இருக்கையில் அமர்ந்திருக்கிறார் போலும் என்று நிகில் சக்கரவர்த்தி நினைத்தாராம்! வேறு அரசியல் வாதிகளிடம் இருந்து இவர் எவ்வளவு வேறுபட்டவராக இருக்கின்றார் என்று எண்ணி வியந்து போனாராம்.

முன்னிருக்கையில் அமர்ந்திருந்த பக்ஷி பின்பக்கம் திரும்பி "நான் எப்போதும் காரின் முன்னிருக்கையில் அமர்வதுதான் வழக்கம் ஏன் என்றால் பொதுவாக துப்பாக்கிக் குண்டுகள் காரின் பின் பக்கத்தில் இருந்து வருவதுதான் வழக்கம்" என்றாராம்! இவர்தான் அரசியல்வாதி.

உயர்ந்த பதவியிலிருக்கும் அறிவிலி
உயர்ந்த மலையிலிருக்கும் மனிதனைப் போன்றவன்.
அனைத்தும் அவனுக்கு சிறியனவாகவே தோன்றும்.

## INTERNET
இன்டர்நெட்

"இணையம்" என்று தமிழில் கூறலாம். ஆனால் இன்டர்நெட் என்றே அனைவராலும் பரவலாக அழைக்கப்பட்டு வருகிறது. கணனிக் கட்டமைப்புக்களை கொண்டுள்ள ஒரு கட்டமைப்பு ஏறக்குறைய 45மில்லியன் பேர்கள் இப்பொழுது இன்டர்நெட் இணைப்பினை உலகெங்கும் பயன்படுத்தி வருகின்றார்கள். அணுஆயுத அழிவில் இருந்து தப்பிக்க அமெரிக்க இராணுவத்துறை 1969ம் ஆண்டு உருவாக்கிய "அர்ப்பாநெட்" என்னும் கணனிக்கட்டமைப்பே விரிபுபடுத்தப்பட்டு இன்டர்நெட் ஆக உருப்பெற்றது.

## INTERNET MOVIE DATABASE
இன்டர்நெட் திரைப்பட விவரஆதாரம்

உலகத் திரைப்படங்கள் பற்றிய ஏராளமான தகவல்களை இலவசமாக அளிக்கும் இன்டர்நெட் முகவரி:
**http://www.cs.cf.ac.uk/movies**

## INTERNET PUBLIC LIBRARY
இன்டர்நெட் பொது நூலகம்

புத்தகங்களை கையால் தொடத்தேவையில்லாத இன்டர்நெட்டின் பொது நூலகம் அமெரிக்காவின் மிச்சிகன் பல்கலைக்கழக நூலகத்துறையினர் உருவாக்கிய இன்டர்நெட் நூலகம் இதில் 1000ற்கும் மேற்பட்ட பத்திரிகைகளும் 5000 நூல்களும் உள்ளன. ஒவ்வொரு செய்தித்தாள் அல்லது பத்திரிகை பற்றிய சிறிய குறிப்பும் உண்டு. இதன் முகவரி:
**http://www.ipl.org** அல்லது **http://.www.ipl.umich.cdu**

## INTERRUPT
குறுக்கிடு

கணனியில் ஒரு வேலை நடைபெற்றுக்கொண்டு இருக்கும் போது குறுக்கிடுவதை இச்சொல் குறிப்பிடுகிறது. ஒருபெரிய வேலை நடைபெற்றுக்கொண்டு இருக்கும் போது "குறுக்கிடு" என்ற ஆணையைக் கொடுத்தால் அது செய்து கொண்டிருக்கும் வேலையை தற்காலிகமாக நிறுத்திவிட்டு நாம் கொடுக்கும் வேறு ஒரு சிறிய வேலையைச் செய்துவிட்டு மீண்டும் அது முதலில் செய்து கொண்டிருந்த வேலையை விட்ட இடத்தில் இருந்து தொடரும்.

## INTRANET
இன்ட்ராநெட்

இன்டர்நெட் சார்ந்த ஒரு கணனி கட்டமைப்பு ஆனால் இன்டர்நெட்டிலிருந்து தேவையானவைகளை பெற்றுக்கொண்டாலும் ஒரு தனிப்பட்ட நிறுவனம் அல்லது கூட்டமைப்பு சார்ந்ததாகவே செயற்பட்டு உலகளாவிய

இன்டர்நெட்டில் இருந்து துண்டிக்கப்பட்டதாகவே செயற்படும். இன்டர்நெட்டுடன் இணைப்புள்ள ஒரு தனியார் கட்டமைப்பு (Private Network)

## INTERNET EXPLORER
## இன்டர்நெட் எக்ஸ்புளோரர்

மைக்கிரோசா.ீ.ப்ட் நிறுவனத்தின் இன்டர்நெட் வலை நோக்கர் (Web Browser) இதன் 40பதிப்பு வெளிவந்துள்ளது. இன்டர்நெட்டிலிருந்து அதிகமான தகவல்களைத் தேடித்தாவும் தேவையான பயன்பாடுகளைச் செய்துகொள்ளவும் இது உதவுகின்றது. இந்தியாவில் ரவி டேட்டாபேஸ், டிபிஎஸ் இன்டர்நெட், Rediff-on-the-net, இண்டியாடுடேகுரூப் போன்ற நேர்முக சேவைகளுடன் நேரடி இணைப்பு பெற்றுள்ளது மைக்ரோசா.ீ.ப்ட். இதன் முகவரி:

**http://www.microsoft.com/ic/**

## INTERNIC
## இன்டர்நிக்

இன்டர்நெட்டில் இருந்து தேசிய தகவல் மையம் இன்டர்நெட் பற்றிய தகவல்களை அதிகமாக சேர்த்துவைத்துள்ள இடம்.

---

(12ம் பக்கத் தொடர்ச்சி..)

**உலகமயமாக்கலின் தீமைகள்**

I. வர்த்தகக் கட்டுப்பாடுகள் நீங்கும்போது அபிவிருத்தியடைந்த நாடுகள் இலாபமடைய குறைவிருத்தி நாடுகள் பாதிப்பமடையும். அதாவது குறைவிருத்தி நாடுகள் விவசாய உற்பத்தி ஏற்றுமதிகளிலேயே தங்கியிருக்கும். இதனால் இதற்கான கேள்வி ஒரு அளவுடன் நின்றுவிடும். தவிர அபிவிருத்தியடைந்த நாடுகள் சுகாதாரக் கட்டுப்பாடுகளை விதிப்பதன் மூலமும் ஏற்றுமதி தடைப்படும். அதேநேரம் அபிவிருத்தி அடைந்த நாடுகள் ஆடம்பரப் பொருகளை உற்பத்திசெய்வதால் அப்பொருட்களுக்கான கேள்வி அதிகதரித்துச் செல்லும். எனவே அவற்றின் ஏற்றுமதி அதிகரிக்கும்.

II. சிறு தொழில் முயற்சியாளர்கள் பாரிய உற்பத்தி நிறுவனங்களோடு போட்டிபோட முடியாமல் தமது உற்பத்தி முயற்சியைக் கைவிட்டு கூலித் தொழிலாளர்களாக மாறவேண்டிய நிலை ஏற்படும். மூலதனப் பற்றாக்குறையே இதற்கான பிரதான காரணமாகும்.

III. பல்தேசிய கம்பனியின் உற்பத்திக் கழிவுகளால் சூழலுக்கு தீங்கு ஏற்படும்.

IV. தொழிலாளர் நலன்கள் பாதிப்படையும்.

V. வருமானச் சமமின்மை அதிகரிக்கும். வறிய நாடுகளுக்கும் செல்வந்த நாடுகளுக்கும் இடையிலான வித்தியாசம் அதிகரிக்கும் அதே வேளை வறியவர்களுக்கும் செல்வந்தர்களுக்கும் இடையிலான வித்தியாசம் அதிகரிக்கும்.

VI. கலாச்சாரங்களை மாற்ற மனிதர்கள் முயற்சிக்கும்போது கலாசார சீரழிவுகள் ஏற்படும்.

# சரியும் வாழ்க்கை

சிறுகதை

கம்பிகளால் பிணைக்கப்பட்ட தன் இரு கைகளையும் பார்த்துக்கொண்டிருந்த ரூபனின் கண்களில் இருந்து கண்ணீர்த்துளிகள் உருண்டோடிக் கொண்டிருந்தன. அவனிற்கு சிறைக்கம்பிகள் தன்னைப் பார்த்து ஏளனம் செய்வது போலிருந்தது. இன்பமாக குதுகலமாக துள்ளித்திரிந்து சந்தோசமயமான வாழ்க்கைக்கு ஏங்கித்தவித்த ரூபனின் மனம் இன்று மானம் என்னும் கோர அரக்கனால் கூனிக்குறுகி இவ்வுலகத்தில் வாழப் பிடிக்காதவனாய் வெட்கி தலைகுனிந்து நிற்கின்றான்.

நல்லவனாய் எதிலும் வல்லவனாய் கள்ளம் கபடமற்ற வெள்ளை உள்ளம் கொண்டவனாய் அவனைப் படைத்த இறைவன் அவனை ஒரு ஏழை வாலிபனாகப் படைத்து அவன் வாழ்க்கையையே கேள்விக்குறியாக்கி கடைசியில் பூச்சியமாக்கி விட்டான். இறைவனிடம் அவன் வேண்டுவது மாடமாளிகையையோ, கோட கோபுரங்களையோ, தங்கச்சுரங்கங்களையோ இல்லை. நிம்மதியாக சந்தோசமாக வாழும் வாழ்க்கையை மட்டும் தான். ஆனால்.....

யாழ்ப்பாண சிறைச்சாலை மணி ஆரவாரமாக ஒலித்தது. "ஏன் மணியடிக்கிறார்கள்" என்பதை தன்னுள்ளே கேள்வியைக் கேட்டு விடைகாணமுடியாதவனாய் தனது வாழ்க்கையின் கேள்விக்குறியைப் போலவே அந்தக் கேள்வியையும் புதிராகவே விட்ட அந்த நிமிடத்தில் சிறைக்காவலாளி அவனிடம் வந்து, "தம்பி உனக்கு வருகின்ற வெள்ளிக்கிழமை கொழும்பு நீதிமன்றத்தில் வழக்கு நடக்கப்போகுது. அதனால் உன்னை இன்றைக்கு கொழும்புக்கு அனுப்பப் போகினம்" என்று கூறவும்.

"கொழும்புக்கா?" என்று தன்னையறியாமலே பிதற்றிக்கொண்டு இருந்தான்.


தம்பி உன்னைப் பார்க்க தெரியுது இந்த வேலை செய்திருக்கமாட்டீர் என்று ஆனால் நான் சொன்னால் காணுமா? இதை அந்த நீதிமன்றம் எல்லோ சொல்ல வேணும். இந்த மாதிரியான கொலை விடயங்கள் கொழும்பில தான் விசாரிக்கப்படுகிறது.

நான் கொலைவெறியனா?, நான் கொலை காரனா? என அவன் மனம் தன்னையறியாமல் கதறியது. கண்களில் மழை நீர் போல கண்ணீர் சொரிந்தது. அவனது உடைந்து போன மனதில் பழைய நினைவுகள் இலக்கியச் சுவடுகளாக தோன்றித் தோன்றி மறைந்து கொண்டிருந்தது.

சிறு பருவத்திலே புற்றுநோயால் தன் தாயை இழந்துவிட்ட ரூபனும் அவன் தங்கை தர்சியும் வறுமையிலும் செம்மையாக வாழும் தம் தந்தை செல்லையாவுடன் வாழ்ந்து வந்தனர். அவர்களின் வாழ்வு செல்வச்செழிப்பாய் இருந்தது என்று சொல்ல முடியாவிட்டாலும் சந்தோசமாய் சுகமாக வாழ்ந்தனர். செல்லையா நற்குணமான உன்னதமான மனிதர். தன் பிள்ளைகளை இருவரையும் உயிருக்கு மேலாக வைத்திருந்தார். அது போலவே பிள்ளைகளும் அவரை நேசித்தனர். அவர் செய்யும் வேலை கூலியாக இருந்தாலும் அதன் மூலம் கிடைக்கும் சிறு பணத்தில் தன் பிள்ளைகளை ஓரளவு சந்தோசமாக வாழவைத்துக்கொண்டு இருந்தார்.

"தம்பி ரூபன் அப்பா உன்னில் எவ்வளவு நம்பிக்கை வச்சிருக்கிறன் நீ கெட்டவனாய் போயிடக்கூடாது. நான் இருக்கும் மட்டும் உன்னையும் உன் தங்கையையும் எப்படியாவது படிப்பித்து நல்லதொரு நிலைக்கு விடுவன்." என்று அடிக்கடி கூறுவார். அவனையும் அவன் தங்கையையும் தன் இரு கண்களைப் போல் எண்ணி வந்த செல்லையா சில நாட்களில் காணாமல் போய்விட்டார்.





விறகு வெட்ட மணற்காட்டுக்குச் சென்றவர்தான் வீடு திரும்பவேயில்லை. பத்தே வயதான ரூபனும், ஐந்தே வயதான தர்சியும் எங்கே தேடுவார்கள். இன்று வருவார், நாளை வருவார் என்று என காத்திருந்த குழந்தைகளின் வாழ்வு சோக மயமானது. தன்னையும் தன் தங்கையையும் காப்பாற்ற வேண்டிய கடப்பாடு ரூபனின் தலைக்கு வந்தது. படிப்பில் விளையாட்டில் வல்லவனாக இருந்தரூபன் தன் படிப்பைக் கைவிட்டான். வீடு வீடாகத்

திரிந்து வேலை செய்தான். கிடைக்கும் பத்து இருபது ரூபாய்களில் எப்படியாவது வயிறு கழுவிக்கொள்வார்கள். ஆனால் தான் படிக்காவிட்டாலும் தன் தங்கையை எப்படியாவது படிக்க வைக்கவேணும் என்ற வெறி அவனிடம் இருந்தது.

"தந்தையின் கனவை தங்கையாவது நிறைவேற்ற வேணும்" என்ற வெறியோடு உழைத்தான். உழைத்த பணத்தை சிறிது சிறிதாக சேமித்தான். எத்தனையோ துன்பங்கள் இன்னல்களை எதிர் நோக்கி தங்கையை பாடசாலையில் சேர்ப்பித்தான். பணப்பற்றாக்குறை வரும் போது தன் உணவைக் குறைப்பான்.

இப்படியே பத்து வருடங்கள் ஓடின. இன்று தர்சி பதினைந்து வயது நிறைந்த இளம் பாடசாலை மாணவி. தகப்பனின் கனவு சிறிது சிறிதாக நிறைவேறும் காலம் நெருங்கிக்கொண்டிருந்தன. தர்சி தன் அண்ணனின் கஸ்டத்தை உணர்ந்து படித்து உயர்தர வகுப்பிற்கு தகுதி பெற்றாள்.

"அண்ணா நான் யு.ஃடு படிக்க வேணும் என்றால் வேற பள்ளிக்கூடம் போக வேணும் நிறையக்காசு செலவு வரும் அதால...."

"என்ன தர்சி அதால என்ன?"

"அதால நான் இவ்வளவு படிச்ச படிப்பை வைச்சே வேலை தேடுவம் என்று நினைக்கின்றேன்" தங்கை அப்பாவின் ஆசை என்னுடைய ஆசை எல்லாம் நீ பெரிய படிச்ச மனிதனாய் வரவேணும் என்பதுதான். நான் உன்னை எப்படியாவது பிரபல பாடசாலையில் சேர்ப்பேன்.

பிரபல பாடசாலை அதிபரை சந்தித்து கெஞ்சினான். அவர் மறுத்து விடவே அவன் சோகத்துடன் வீடு திரும்பினான். மாலையில் திரும்ப போய் கெஞ்சிப்பார்ப்போம் என்று எண்ணி அவர் வீடு தேடி நடக்கத்தொடங்கினான். ஆனால் அவனையறியாது அவன் காலம் வேறு பக்கம் திசை திரும்பியது.

அவன் அங்கு சென்ற அதேவேளை இனந்தெரியாத நபர்களால் அப்பாடசாலை அதிபர் கொலை செய்யப்பட்டார். ஆனால் பழி அவ்விடத்திற்கு சென்ற ரூபனின் மீது விழுந்தது. சாட்சியங்கள் நிகழ்வுகள் பொருந்தி வரவே அவன் குற்றவாளியாக்கப்பட்டான். "நேர்மையே உருவான செல்லையாவின் மகனா இவன்" என்று கூறி உலகம் சிரித்தது.

கொழும்பு உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்து நடந்தது. ரூபன் கொலைகாரனாக கருதப்பட்டு தூக்குத் தண்டணை தீர்ப்பு வழங்கப்பட்டது.

நேர்மையே உருவான அவன் ஒரு துக்குதண்டணை கைதி. கற்க வேண்டும், உயர வேண்டும் என குடும்பத்தின் உணர்வுகள் சரியாகப் பரிமாறப்பட்டபோதும் இந்த உலகம் அவனை உருக்குலைத்து விட்டது. அவன் கனவு வாழ்க்கை சரியுமா? அவன் சிறந்த கல்வி மானில்லை. ஆனால் கல்விக்காய் உயிர் கொடுக்கப்போகும் ஒரு கல்வியுலக நாயகன் தனது கனவுகள் நிறைந்த உள்ளத்துடன் துக்குமேடையை நோக்கிஅ வன் கால்கள் நடைபோட்டது.

**(யாவும் கற்பனை)**

**வை.நித்தியா,**
**மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை,**
A/L **2005 (கலைப்பிரிவு)**

---

YAMAHA
யமஹா பிளாஸா PLAZA

*யமஹா பிளாஸா* நிறுவனம்
**வான்முழக்கத்துடன்** இணைந்து
மாணவர்களிடையே கட்டுரை, கவிதை போட்டிகளை நடத்தவுள்ளது.

***போட்டிக்கான தலைப்பு***

கட்டுரை: 1. தமிழ் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள்
2. விடுதலைக்கான போரில் மாணவரின் பங்களிப்பு.

கவிதை: தற்கால அரசியல் நிலமைகளை மையமாக வைத்து எந்தத்தலைப்பிலும் கவிதைகளை எழுதி அனுப்பலாம்

போட்டி முடிவுத்திகதி: 29.04.2004
**பெறுமதியான பரிசுகள் உங்களுக்காக காத்திருக்கின்றன.**

***அனுப்ப வேண்டிய முகவரி:***
***யமஹா பிளாஸா,***
**298, காங்கேசன்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

# தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் சாதித்தது என்ன?....

அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு பல மாதங்கள் கடந்த சூழ்நிலையிலும் தமிழ் மக்களின் வாழ்வில் பெரிய மாற்றங்கள் ஏதும் ஏற்படவில்லை. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் மக்கள் தமது சொந்த வாழ்விடங்களில் சுதந்திரமாக வாழக்கூடிய சூழ்நிலை இருந்தாலும் யுத்தத்தால் மிகவும் மோசமாக சிதைவடைந்த தமது வாழ்விடங்களை மிள புணரமைக்கக் கூடிய எந்தச் சூழ்நிலையும் இது வரை ஏற்படவில்லை. இந்த நிலையில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மக்களின் வாழ்விடங்கள் சிறிலங்கா படைத்துறையினரின் தளங்களாகவும் முகாங்களாகவும் காவலரண்களாகவும் உள்ளன. இதை விட மேலும் பல இடங்களை சிறிலங்கா படைத்துறை உயர்பாதுகாப்பு வலயமாக மாற்றும் நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகிறது. தமது வீடுகளில் சிறிலங்கா படைத்துறையினர் முகாம் அமைத்து உல்லாசமாக இருக்க வீட்டு உரிமையாளர்கள் அகதி முகாம்களில் அவல வாழ்வு வாழ்ந்து வருகின்றனர்.

இதைவிட குடாநாட்டில் சிறிலங்கா படைத்துறையினர் மக்கள் மீது பல்வேறு ராணுவ நெருக்குதல்களையும் மேற்கொண்டு வருகின்றனர். மக்கள் படைத்துறையினரின் வன்முறைக்கு எதிராக அணிதிரளும் போது மக்கள் மீது சிறிலங்கா படைத்தரப்பும் சிறிலங்கா காவல்த்துறையும் வன்முறைகளையே கட்டவிழ்த்து விடுகின்றன.

மக்கள் விடுதலைப் புலிகளுக்கு அடுத்த படியாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் மீது நம்பிக்கை வைத்திருந்தார்கள். ஆனால் அந்த நம்பிக்கை இன்று அவநம்பிக்கையாக மாறிவருகிறது. காரணம் இவர்கள் சிறிலங்காவின் பாராளுமன்றத்திற்கு செல்வதற்கு வாக்கு கேட்கும் காலத்தில் மட்டும் மக்கள் முன் தோன்றுவார்கள் பின் கொழும்பிலும் பிற வெளிநாடுகளிலும் நின்று அறிக்கை விடுவதுடன் இவர்களின் அரசியல் வாழ்வு ஒடிக்கொண்டு இருக்கின்றது. மாறாக மக்களுக்காக பாடுபடுவதாக கூறி பல மக்கள் விரோத நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகிறார்கள். களுத்துறை சிறைச்சாலை கைதிகளிற்கு எமது மக்கள் சேகரித்து அனுப்பிய பணத்தை சுருட்டி விடுவதுதான் இவர்கள் பணியா? தமிழர்களுக்கு ஏதிராக சிறிலங்கா படைத்தரப்பும் காவல்த்துறையும் அநீதி இழைக்கும் போது தமிழ் மக்களின் பிரச்சனைக்காக வாதாடுகிறேன் என கூறி பின்னர் சிறிலங்கா பொலிசாருடன் பேரம் பேசி வழக்கை

வாபஸ் பெற்று பலரை ஏமாற்றும் வேலையில் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி ஈடுபட்டு வருவது துய்மையானவர்களால் வளர்க்கப்பட்ட அகில இலங்கை தமிழ் காங்கிரசிற்கு மட்டும் அல்ல மக்களுக்காக எதையாவது செய்ய வேண்டும் என ஆவலுடன் செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமாருக்கும் நல்லதல்ல. இவர் இதே போக்கில் போனால் நீதிமன்றத் தொழிலை விடுவதற்காகவா சிறிலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை சந்தித்துவிட்டு அறிக்கை மட்டும் பார்ப்பதாக கூறுவதே நல்லது. மக்களிடம் வாக்குக்கேட்டு வந்தீர்கள். தமிழ் மக்களின் விடுதலைக்கு ஏதிராக செயற்படும் ஈ.பி.டி.பி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ் போன்ற கட்சிகள் எமது இனத்திற்கு எதிராக செயற்படுவது யாவரும் அறிந்த உண்மை.

இதை விட சில தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்திய புலனாய்வு அமைப்பான றோ விற்கு முகவர்களாக செயற்படும் கதையும் பலமாக உலாவுகிறது. இதைவிட அமெரிக்காவின் புலனாய்வு அமைப்புடன் குடாநாட்டுப் பத்திரிகை ஒன்றின் முக்கிய புள்ளி ஒருவருக்கு தொடர்பு உள்ளதாகவும் கதைகள் கசிகின்றன. யார்தான் தமிழ் இனத்திற்கு ஏதிராக செயற்பட்டாலும் யார்தான் மேற்குலக புலனாய்வு அமைப்புக்களுடன் தொடர்பு ஏற்படுத்தி எமது இனத்திற்கு எதிராக செயற்பட்டாலும் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை நேர்மையுடனும் உறுதியுடனும் முன்னெடுக்கும் விடுதலைப்புலிகள் அமைப்பும் தலைவர் மேதகு பிரபாகரனும் நிச்சயம் தமிழர்களுக்கு விடுதலையை பெற்றுத்தருவார்கள் என்ற அசையா நம்பிக்கை தமிழ் மக்களிடம் உள்ளது. இதில் தமிழ் மக்கள் அடுத்த படியாக நம்புகின்ற தமிழ் தேசிய கூட்டமைப்பினர் கொழும்பில் சொகுசு வாகனங்களில் சொகுசாக வாழ்ந்து கொண்டு அறிக்கை விடுவதை நிறுத்தி மக்களுடன் இணைந்து நின்று வெகுஜன போராட்டங்களை நடாத்தி ராணுவ நெருக்குதல்களை குறைக்க முன்வர வேண்டும். ராணுவ நெருக்குதல்கள் இன்றி தமிழ் மக்கள் நின்மதியாக வாழவே விரும்புகின்றார்கள். இனி புதிதாக பாராளுமன்றம் போகும் போதாவது மனச்சாட்சிப்படி நடப்பார்களா இவர்கள்?

---

**@ மலர்ந்த மலர்கள் வாடுவது கண்டு மலரப்போகும் மலர்கள் அஞ்சுவதில்லை**

**@ ஆனந்தம் என்பது நாம்விரும்புவதைச் செய்தலில் இல்லை ஆனந்தம் நாம் செய்யவேண்டியதை விரும்புதலிலே உள்ளது**




நோயற்ற வாழ்வே
குறைவற்ற செல்வம்.
வடமராட்சி மண்ணில்... அதுவும் நெல்லியடியில்.....
சகலவிதமான மருந்து வகைகளையும், குழந்தைகளுக்கு தேவையான
சகல சத்துணவுகள், மாவகைகள், மருந்து வகைகள் என்பவற்றை
நிதான விலையில் பெற்றுக்கொள்ள
உங்கள் தெரிவாக இருக்கவேண்டியது..
KUMUTHINI PHARMACY
Kodikamam Road, Nelliyady




DINA AUDIO VIDEO CENTRE
டினா ஓடியோ வீடியோ சென்ரர்
Audio Recoding
&
Advertisement Recordings
That are currently avilable in
Jaffna Peninsula to the best of
customers stisfaction.
Point Pedro Road, Nelliady.
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.




சமாதானம் நிலவும் இந்தச்சூழலில்
உல்லாசமாய் உங்கள் பொழுதைக்கழிக்கவும்
நீங்கள் விரும்பிய இடத்திற்கு
தரைமார்க்கமாகவோ அல்லது விமானம் மூலமோ செல்லவும்
வசதிகளை ஏற்படுத்தும் சிறந்த நிறுவம்
R.B Booking Centre
15, Grand Bazaar,
Jaffna
வைரவர் கோயிலடி,
நவீன சந்தை, யாழ்ப்பாணம்.



YAMAHA
Touching Your Heart
WE BRING THE BEST QUALITY MOTOR CYCLES TO JAFFNA
யாழ் ஏக விநியோகஸ்தர்கள்
YAMAHA
யமஹாபிளாஸா PLAZA
298 காங்கேசந்துறை வீதி, யாழ். 0777 198 000.



உல்லாசப் பயணிகள் சபையின் அனுமதி பெற்று
யாழ்நகரில் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட
யாழ் பீச் இன்
தற்போது
மீண்டும் தனதுசேவையை வழங்கிக் கொண்டிருக்கிறது
தரமான உள்நாட்டு வெளிநாட்டு உணவுவகைகள்,
நவீன குளிரூட்டப்பட்ட தங்குமிட வசதிகள்
அனைத்தும் ஒரேயிடத்தில்.....
சில்லென்று வீசும் கடற்கரைக்காற்றை அனுபவித்தபடி
குதூகலிக்க..........
யாழ் பீச் இன்
T.P 2225490.